சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 07.11.2025

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | 100/2025 |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-3 |
| சாட்சியின் பெயர் | : | சுசிலா |
| கணவர் பெயர் | : | அன்பழகன் |
| கிராமம் | : | காணூர் |
| தாலுக்கா | : | திருவாரூர் |
| தொழில் | : | கூலி வேலை |
| வயது | : | 40 |

2025 ம் ஆண்டு நவம்பர் மாதம் 07 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் உதவியாளராக பணிபுரியும் திருமதி. ஆர். அன்பரசி அவர்களால் இந்த சாட்சிக்கு 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

1 முதல் 7 மற்றும் 10 ம் எதிரிகள் ஆஜர். 8 மற்றும் 9 ம் எதிரிகள் இருவரும் வேறு வேறு வழக்குகளில் முறையே 8 ம் எதிரி மதுரை மத்திய சிறையிலும், 9 எதிரி கோவை மத்திய சிறையில் உள்ள காரணத்தினால் அவர்களை ஆஜர் செய்ய P.T Warrant பிறப்பிக்கப்பட்டுள்ளது. 8 ம் எதிரி ஆஜர் படுத்தப்பட்டுள்ளார். 9 ம் எதிரி கோவையில் உள்ள சிறையில் இருந்து வீடியோ கான்பிரென்ஸ் மூலம் எதிரி ஆஜர் படுத்துவதாக வேண்டுகோள் கடிதம் கொடுத்ததன் அடிப்படையில் இன்று மேற்படி 9 எதிரி வீடியோ கான்பிரென்ஸ் மூலம் ஆஜர்

படுத்தப்பட்டுள்ளார். அரசு வழக்கறிஞர் மற்றும் எதிரிகள் வழக்கறிஞர் ஆஜராகியுள்ளனர்.

முதல் விசாரணை

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் இந்து பறையன் சமூகத்தை சேர்ந்தவள் ஆவேன். ஆஜர் எதிரிகளை தெரியாது. வீடியோ கான்பிரென்சின் மூலம் ஆஜராகியுள்ள ஆஜராகியுள்ள 9 எதிரியை எனக்கு தெரியாது. இவ்வழக்கின் அ.சா-1 ஜான்சன் எனது அக்கா மகன் ஆவார். இவ்வழக்கு சம்பவத்தில் இறந்து போன குமரேசன் என்பவர் எனது அக்கா மகன் ஆவார். அவர் என்னை செய்கிறார் என்றால் தெரியாது. இப்போது அவர் எங்கே உள்ளார் என்றால் அதுவும் எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

(இந்த சாட்சி அரசு தரப்பு வழக்கினை அனுசரித்து சாட்சியம் அளிக்கவில்லை என்பதால் இந்த சாட்சி குறுக்கு விசாரணையில் கேள்விகள் கேட்பது போல் இந்த சாட்சியிடம் கேள்விகள் கேட்க அனுமதிக்கவேண்டுமென அரசு தரப்பு வழக்கறிஞர் வாய்மொழியாக கேட்டுகொண்டதன் அடிப்படையில் அனுமதி வழங்கப்படுகிறது.)

அரசு தரப்பு தொடர் விசாரணை

கடந்த 14.11.2021 ஆம் தேதி மாலை 5.20 மணியளவில் திருவாரூர் வாளவாய்கால் என்ற இடத்தில் டீக்கடையில் இருந்த எனது அக்கா மகனான இந்த வழக்கு சம்பவத்தில் இறந்து போன குமரேசன் என்பவர் இருசக்கர வாகனத்தில் அமர்ந்து சென்றபோது குமரேசன் ஓட்டி கொண்டு நாகப்பட்டினம் ரோட்டில் கிடாரம்கொண்டான் என்ற இடத்தில் சென்று கொண்டிருந்தபோது இரு சக்கர வாகனத்தில் 20 இருந்து 25 வயது மதிக்க தக்க நபர்கள் வந்து மறித்தாகவும், அப்போது மேலும் இரு சக்கர வாகனத்தில் இருந்த இரு நபர்கள் இறங்கி அவர்கள் கையில் வைத்திருந்த ஆயுதங்களால் எனது அக்கா மகன் குமரேசன் தலையில் வெட்டினார்கள் என்றும், இதில் இரு சக்கர வாகனத்தில் ஓட்டி சென்ற குமரேசன் என்பவரும் நானும் கீழே விழுந்து விட்டோம் என்றும், இரு சக்கர வாகனத்தில் இருந்து கீழே விழுந்த எனக்கு தலையில் காயம் ஏற்பட்டு மயங்கிவிட்டேன் என்றும், இரு சக்கர வாகனத்தில் வந்திருந்த நபர்கள்

இருவர் மாறி மாறி ஆயுதங்களால் குமரேசன் வெட்டியதாகவும், இதில் படுகாயம் அடைந்த குமரேசன் இறந்து விட்டார் என்றும், பின்னால் இரு சக்கர வாகனத்தில் வந்த குமரேசன் தம்பியான அ.சா-1 ஜான்சன் என்பவர் இந்த சம்பவத்தை பார்த்தார் என்றும், இது சம்பந்தமாக அ.சா-1 ஜான்சன் போலீசில் புகார்அளித்தார் என்றும் சொன்னால் சரியல்ல. அ.சா-1 கொடுத்த புகாரின் அடிப்படையில் போலீசார் விசாரணை செய்து வாக்குமூலங்கள் பதிவு செய்துள்ளனர் என்று சொன்னால் சரியல்ல. என்னை திருவாரூர் உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் விசாரணை செய்தார்கள் என்றும், அப்போது நான் குமரேசன் என்பவருடன் இரு சக்கர வாகனத்தில் வந்தேன் என்றும், குமரேசன் சென்ற இரு சக்கர வாகனத்தை அடையாளம் தெரியாத 20 முதல் 25 வயது உடைய நபர்கள் மறித்து குமரேசனை வெட்டி காயம் ஏற்படுத்தி சம்பவ இடத்திலேயே இறப்பை ஏற்படுத்திவிட்டார்கள் என்று கூறியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் தற்போது அ.சா-1 மற்றும் அ.சா-2 ஆகியோர்கள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u> இல்லை.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2025.11.07 17:10:05 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.